என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 476, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

476—

புறவழிச்சாலை

***123—திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் மற்றும் சுசீந்திரம் நகரப் பகுதிகளில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் மற்றும் சுசீந்திரம் நகரப் பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த புறவழிச்சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு தமிழக மக்களுக்குக் கேட்காமலேயே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் என்னுடைய நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட சுங்காங்கடை பகுதியில் சுமார் 30 வருஷ காலமாக பேருந்து சரியாகப் போகமுடியாத காரணத்தால், சுங்காங்கடையைச் சேர்ந்த பகுதியிலும், புத்தேரி, அக்காமரத்தட்டு, சுசீந்திரம் வழியாக அந்தப்

பகுதியில் ஒரு புறவழிச்சாலை அமைத்துத் தந்தால் நாகர்கோவில் தொகுதி மக்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் போக்குவரத்தில் எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள தமிழ்நாடு எல்லை முதல் கன்னியாகுமரி வரை புதிதாக நான்கு வழிச்சாலை அமைக்க இந்திய தேசிய புறவழிச்சாலை ஆணையத்தின் மூலம் தற்போது நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தின் ஒரு பகுதியாக நாகர்கோவில் மற்றும் சுசீந்திரம் நகரப் பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் உள்ளது. இந்த புறவழிச்சாலை தொட்டிவேடு பகுதியில் ஆரம்பமாகி கி.மீ. 72/300 களியங்காடு வழியாக வழுக்கும்பாறையில் முடிவடைகிறது. கி.மீ. 88/500 மேற்படி நிலம் கையகப்படுத்தும் பணி 85 சதவீதம் முடிவடைந்துள்ளது. 60 மீட்டர் அகலத்திற்கு நில ஆர்ஜிதம் செய்ய முடிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய 26 கிராமங்களில் 5 கிராமங்களிலுள்ள பட்டாதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இதுவரை 8 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 21 கிராமங்களுக்கு விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட சாலைப் பணி சுமார் பத்து வருட காலமாக தள்ளிப்போடப்பட்டு, மத்திய அரசு இதுவரை செய்து தரவில்லை. அதனால் மாண்புமிகு அமைச்சர் எப்போது செய்து தருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 13]

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை. ஆகவே, இப்போது நில ஆர்ஜிதப் பணிகள் 85 சதவீதம் முடிந்திருக்கின்றது. 5 கிராம மக்களுக்கு பட்டாதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியவர்களுக்கும் விரைவாக அந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, அந்தப் புறவழிச்சாலைப் பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 477, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

477—

நியாய விலைக் கடை

*11325—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைபோளூர் ஊராட்சி, ஸ்ரீராகவேந்திரா நகரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*